ரமா சுரேஷ் (Rama Suresh)
ரகசியம் (*The Secret*)

அந்த கோப்பித்தியம் கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் எல்லோருமே உரத்து சொல்ல முடியாததொரு ரகசியமாய் அந்த சமாச்சாரத்தை அருகிலிருக்கும் யார் காதிலாவது கிசுகிசுத்து விட்டுதான் செல்வார்கள். எல்லோருக்கும் பேசுபொருளாய் மாறிய அவள் அல்ஜுனேட்டின் ஓர் அடுக்குமாடி குடியிருப்பின் கீழ் இயங்கும் அந்த இருபத்திநான்கு மணிநேர சாப்பாட்டு கடையில் ஒரு நாளின் முழு நேரமும் சுற்றிக்கொண்டிருப்பது போன்றே இருக்கும். எப்போது சாப்பிடுவாள், தூங்குவாள், குளிப்பாள் என்று கண்காணிப்பதற்காகவே ஒரு கூட்டம் காத்திருக்கும். தன் ரகசியமறிய ஆர்வமெடுத்த எல்லோருடைய கண்களுக்குள்ளும் மண்ணைத் தூவிவிட்டு தன் வழக்கமான வேலைகளை செய்து கொண்டுதானிருந்தாள். அவளை ஒற்றை வார்த்தையிலோ, எளிதாகவோ வர்ணித்துவிடமுடியாது. நஞ்சின் தீவிரமேறிய வாளிப்பு. நீலம் பூத்த அவள் கண்களும் நாசியும் உலகின் சர்வ அழகையும் மௌனமாய் கக்கிக்கொண்டிருந்தது. தாயைப் பிரிந்த குட்டி யானை தும்பிக்கையை அங்கும் இங்கும் துளாவியபடி நடப்பது போல் அவளின் தனிமை, அந்த கோப்பி கடையில் ஏதோ

ஒன்றைத் துளாவிக்கொண்டிருக்கும். வெளுத்த அவள் முகத்தில் உள்ள மூக்கு மட்டும், எதையோ மோப்பம் பிடித்தப்படி சிவந்த குடைமிளகாயாய் இருக்கும். அதற்கான காரணங்களை அங்கிருந்த ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக பேசிக் கொண்டனர்.

பத்து பன்னிரண்டு சாப்பாட்டு கடைகளை உள்ளடக்கிய கோப்பித்தியம் கடையில் அவள் வைக்கும் மீன் தலைக்கறி வாசனை மட்டும் காற்றில் தனித்து மிதந்து கொண்டிருக்கும். மூன்றடுக்கு உடைய கண்ணாடி சாப்பாட்டுப் பெட்டியில் எட்டு வகையான சைவர், விதவிதமாய் மீன், கோழி, பகதேல், பிஷ்பிள்ளே, ஹட்டாக், நக்கட்ஸ் என்று பொரித்து அடுக்கியப்படியும், மீன், கோழிக்கறி, சம்பால், இறைச்சி கிச்சாப், சோத்தோங், ஊடன் என்று சமைத்து வழித்துக் கொட்டியபடியும் இருப்பாள். மீபோ, சீ புட் கடைக்காரர்கள் வயிற்றெரிச்சலோடு அவளை முறைத்தப்படி வியாபாரத்தைக் கவனிப்பார்கள்.

கொஞ்சமும் சிநேகமற்ற அவளுடைய நீலம் பூத்த கண்களுக்கு சிரிக்கவோ, முறைக்கவோ தெரியாது. அந்தக்

கண்களுக்குள் பல வருடங்களின் நினைவுகள் மட்டும் சிலந்தி வலைபோல் விரிந்துக்கொண்டே இருக்கும். அதில் சிக்கிக்கொண்ட ரகசியத்தை மீட்டு எடுப்பதற்காகவே அவன் தினமும் மாலை அங்கு வந்துவிடுவான். அங்கு சொல்லப்படும் ரகசியத்தைப் போல் அவனும் மிக சுவாரசியமானவன். சொல்லப்போனால் அவன்தான் அந்த ரகசியத்தைக் கட்டிக்காக்கும் பூதமென பலரும் நம்புகின்றனர். அவளைப் பொருத்தவரை அவன் ஒரு வாடிக்கையாளன், அவ்வளவுதான்.

அவள் உருவத்தை விட அவன் வயது பெரியது. எப்போதாவது பல்செட்டை கழட்டிவிட்டு சிரிக்கும்போதுதான் அவன் வயது தெரியும். தினமும் ஒரு மீனின் தலைக்கறி சாப்பிட்டால் வலிமையாகவும், இளமையாகவும் இருக்கலாம் என்ற அவனுடைய இளமைக்கான ரகசியத்தை மட்டும் சத்தம் போட்டுச் சொல்லுவான். அவன் எதையெல்லாம் சத்தம்போட்டு சொல்கிறானோ அது தான் அந்த ரகசியத்தை சென்று அடைவதற்கான நுழைவாயில் என்ற நம்பிக்கையுடன், பலர் அவன் சொல்வதை எல்லாம் அரைத்துக் கரைத்துக் குடித்துக்கொண்டிருந்தனர். அங்கு சாப்பிட வரும்

சிறுபிள்ளைகள் முதல் அவன் பெயர் சொல்லித்தான் அழைப்பார்கள். அதையே அவனும் விரும்பினான். யாரேனும் அவன் வயதை தெரிந்துகொண்டு மரியாதை கொடுக்கும்போதுதான் சண்டைக்கு இழுப்பான். அவன் மல்யுத்தத்தை அறிந்தவர்கள் எவரும் அவனுக்கு மரியாதை கொடுக்க மாட்டார்கள்.

கோப்பித்தியம் கடையில் மது அருந்துவதற்கும், புகைப்பதற்கும் ஒரு மூலையில் போடப்பட்டிருக்கும் வட்டமேசையில் அவன் பெயர் எழுதவில்லை அவ்வளவுதான். அவன் வந்தமர்ந்த சில நிமிடங்களில் தண்ணீர் கடையில் இருந்து அவன் கேட்காமலே பெரிய கண்ணாடி குடுவையில் மதுவும், சிறிய நீலநிற பேரல் வாளியில் ஐஸ்கட்டிகளும் வைத்து விடுவார்கள். எவ்வளவு போதையில் இருந்தாலும் அவள் கடை உணவை தவிர வேறு எந்த கடையிலும் அவன் சாப்பிடுவதில்லை. சாப்பாடும் கேட்காமலே அவள் கொண்டுவந்து வைத்து விடுவாள். அவன் சத்தமாக சிரிக்கிறான் என்றால், இரண்டு ஜக் மது காலி என்று அங்கிருக்கும் கடை முதலாளிகள் புரிந்து கொள்வார்கள். அவனால் அங்கிருக்கும் மற்ற கடைகளுக்கு எந்த விதத்திலும் லாபம் இல்லை

என்றாலும் சில நேரங்களில் அவன்தான் சின்ன சின்ன பஞ்சாயத்துக்களுக்கான தலைவர். சிக்கன் ரைஸ் விற்கும் சீனன் அவ்வப்போது ஏதாவதொரு காரணம் சொல்லி அங்கிருக்கும் மற்றகடை முதலாளிகளிடம் சண்டைக்கு நிற்பான். “எனக்கு வியாபாரம் அதிகமாக இருப்பதால், மந்திரிச்ச பொடியை என் கடையில் தூவி விட்டீர்கள், நேற்று நீதான் என் கடைப்பக்கம் வந்தாய் இன்று பார் எனக்கு வியாபாரம் இல்லை” என்று தினமும் ஒரு கடை முதலாளியிடம் சண்டைக்கு நிற்பவனிடம், “ஓய் கோபத்தில் கையை அவள் பக்கம் நீட்டிவிடாதே பிறகு ஃபிங்கர் ப்ரைதான்” என்று இவன் சொல்வான். சமயங்களில் அருகில் இருப்பவர்களிடம் “மனுசப்பிரியாணி எவ்வளவு ருசியா இருக்கும் தெரியுமா?” என்றபடி, மதுவை நுகர்ந்து, மெல்ல விழுங்கியப்படி கண்களை மூடி சிரிப்பான். ஐஸ் கட்டியை நாக்கில் வைத்து பந்தை சுழற்றுவதுபோல் சுழற்றி விளையாட்டுக்காட்டியவன் பெருமூச்சு விட்டபடி “சுவையாக சாப்பிடத் தெரியாதவனுக்கு பொண்டாட்டி எதற்கு” என்று சொல்லித்தான் அவளின் கதையை சுவாரசியமாக துவங்குவான்.

அவள் முதல் புருசனைப் பற்றி சொல்லும்போது அவன் முகம் எதையோ பறிகொடுத்தது போல் இருக்கும். அவனைப்பற்றி சொல்வதற்கு ஒன்றுமில்லை என்றாலும், அவளுக்கு பிறந்த ஆறு குழந்தைகளும் அவனுடன் இருக்கும் போது பெற்றுக் கொண்டதுதான். அதிலும், அவளுக்கு கடைசியாகப் பிறந்த இரட்டை குழந்தையில் ஒன்று அவனுக்குப் பிறக்கவில்லை என்று சொல்லுவான்! சொல்லிவிட்டு, வாயைப் பிளந்து கொண்டு தூங்கும் குழந்தையைப்போல், ஸ்டீம்போட்டில் தலையைப் பாதி வெளியே வைத்துக்கொண்டு வெந்து கொண்டிருக்கும் அங்கோலி மீனின் கண்களை மிக இயல்பாய் உறிஞ்சிக்கொண்டிருப்பான். எப்போதும் கேட்பவர்கள் வாயைப் பிளந்தப்படி உட்கார்ந்திருப்பார்கள். புதிதாய் கேட்பவர்கள்தான் அவர்களின் மூளை உறிஞ்சப்பட்டது போல் தலையைப் பிடித்தபடி குழம்பிப் போவார்கள்.

“அவள் முதல் புருசன் மட்டும் விபத்தில் சாகாமல் இருந்திருந்தால், இந்தக் கோப்பித்திய கடைக்கு ரகசியமே இல்லாமல் போயிருக்கும்” என்று சுசம்படாசை (மீன்புளிக்கறி) சப்புக்கொட்டிக்கொள்வான். அவன் முகம் போகும் பாவனைக்கு

கதை கேட்டுக்கொண்டிருப்பவனின் உடல் சிலிர்த்துக்கொள்ளும். கைகளை நீட்டி முதுகை வளைத்து பூனை போல் தலையைச் சிலுப்பியப்படி “அவன் சாகும் போது அவளுக்கு இருபத்தி ஐந்து வயதுதான். எவ்வளவு காத்து அடித்தாலும் அணைந்து போகாத ஊதுவத்தி மாதிரி இருப்பாள். அவளிடமிருந்து வரும் வாசம் அவள் கண்கள் வழியாகத்தான் கசிந்து கொண்டிருக்கும். அந்த வாசனையில் சிக்கிய எவனும் மீள முடியாது. காந்தம் போல் பார்ப்பாள். ஆனால், எவனையும் அவ்வளவு சீக்கிரம் ஈர்த்துக்கொள்ள மாட்டாள். சாப்பாட்டிற்காகவே இந்த உலகம் முழுவதும் சுற்றியவன் நான். இவள் கையில் இருக்கும் வாசனையும், ருசியும் இது வரை நான் எங்கும் பார்த்ததில்லை. நன்றாகச் சமைக்கத் தெரிந்தும் நஷ்டத்தில்தான் நின்றாள். பல பேர் பலமாதம் கணக்கு வைத்து சாப்பிட்டு அவளை ஏமாத்தியபோதுதான் அவன் வந்து சேர்ந்தான். சிரிப்பைத் தவிர வேறு எதையும் தெரியாதவளுக்கு, வாழ்க்கையில் உள்ள அத்தனை அசிங்கங்களையும் கற்றுக் கொடுக்கவே இரண்டாவது புருசனாக வந்து சேர்ந்தான்.

அவள் வாழ்க்கையில் செய்த மிகப்பெரிய தவறு அந்த பர்மீஸ் பயலைச் சேர்த்துக் கொண்டதுதான். வியாபாரத்தில் எந்த நுணுக்கங்களும் தெரியாத அவளுக்கு அவனே எல்லாமானான். வியாபார நுணுக்கங்களைத் தவிர்த்த எல்லா கெட்ட சவகாசங்களையும் பழக்கி விட்டான். அட்டையைவிட மோசமானவன், அவளின் சமையல் ருசியை வைத்து பல்லாயிரம் வெள்ளிகளை சம்பாதித்தது மட்டும் அல்லாமல், அவளுக்கு கடன் கொடுக்கும் முதலைகளிடம் பல்லாயிரம் வெள்ளிகளை கடன் வாங்கினான், ஒரு நாள் மொத்தமா சுருட்டிக்கொண்டு ஓடிவிட்டான். பாவம்! பண மோசடியில் கொஞ்ச நாள் ஜெயிலில் இருந்தாள். அதுவும் நல்லதுக்கே என்று அவள் வாழ்க்கை நகரத்துவங்கியது. தண்ணி கடை வைத்திருக்கானே, என் நண்பன்” என்று சொல்லி விட்டு அனைவரின் முகத்தையும் பார்த்துக்கொள்வான். யாராவது இவன் வயதைப் பற்றி யோசிப்பதுபோல் இருந்தால் அவனின் இளமையின் ரகசியத்தை பேச ஆரம்பித்து விடுவான். அவனுடைய சுபாவம் தெரிந்தவர்கள் நெற்றியைச் சுருக்கி யோசனை ரேகைகளை மறைத்துக் கொள்வார்கள். அவன் சிறிது நேரம் அமைதியாக

இருந்துவிட்டு தொடங்குவான், “என் நண்பன்தான் அவள் பிள்ளைகளை அந்த நேரத்தில் பார்த்துக்கொண்டான். அவள் வெளியில் வந்தபிறகு மூன்றாவது புருஷனாக சில காலம் இருந்தான். புதிதாகக் கேட்பவர்கள் அடுத்த ரகசியத்தை எதிர்பார்த்து காத்திருப்பார்கள். பலமுறை கேட்டுக் குழம்பியவர்கள் அதே குழப்பத்துடன் மீன் சூப்பில் உள்ள நூடுல்சை தனித்தனியாக பிரிக்கும் முயற்சியில் இருப்பார்கள்.

அவன் முகத்தில் தாடி என்ற பெயரில் இருக்கும் நாலு மயிரையும் தடவியவன், மதுக் கோப்பையை முகர்ந்தபடி, “என் நண்பன் தொட்ட ஒரே பெண் அவள்தான். பார்க்கத்தான் முரடன் போல் இருப்பான். ஆனால், மிக மென்மையானவன். காதல் என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்னவென்று எனக்கு தெரியாது. ஆனால், அது ஒரு கொடிய வியாதின்னு அவனைப் பார்த்துதான் தெரிந்துகொண்டேன்.” பக்கத்து மேசையில் சாதத்தை குச்சியால் வேகமாகத் தின்றுக்கொண்டிருந்த இளஞ்சோடி ‘ஆம்’ என்பது போல் தலையாட்டி சிரிக்கவே அவர்கள் மீது சிறு ஐஸ் துண்டை வசீயவன் அடி வயிற்றில் முட்டிக்கொண்டிருந்த சிறுநீரை அடக்கியபடி

அடித்தொண்டையில் முனஙகினான், “அவளுடைய ஆறு பிள்ளைகளும் இன்றுவரை அவனுடன்தான் இருக்கிறார்கள்” என்றவன் அவசரமாக கழிவறை நோக்கி ஓடினான்.

டிஸ்யூ பேப்பரில் கைகளை துடைத்தப்படி “குடிகாரப் பயலுக! ஒன்னுக்கு போனா ஒழுங்கா ஃபிளஷ் பண்ணுறது இல்ல” திட்டியவன் விட்ட இடத்தை சரியாகப் பிடித்துக்கொண்டான். “சென்ற ஏப்ரல் மாதம்தான் அவளுடைய மூன்றாவது மகளுக்கு நிக்கா முடித்து வைத்தான். அவள்தான் கேட்ரிங் என்பது பலருக்குத் தெரியும். ஆனால், யாருக்கும் தெரியாத ரகசியம்,” அவள் எங்கிருக்கிறாள் என்று பார்த்தப்படி “ஒத்த பைசா குறைக்காமல் அவனும் கொடுத்தான் அவளும் வாங்கிக்கொண்டாள். வாரத்தில் என்றாவது ஒரு நாள் அந்தப் பிள்ளைகள் அவள் கடைக்கு சாப்பிட வருவார்கள். வரும்போதெல்லாம் அவன் பணம் கொடுத்துவிடுவான்.

ஒரு முறை அவள் உடல் நிலை சரியில்லாமல் GH-ல் இருந்தாள்! நல்லா இருந்த அவனும் கடையை மூடிவிட்டு GH-ல் போய் படுத்துக்கொண்டான். அவளை விட்டு ஒரு நிமிடம் பிரிந்து

இருக்கமாட்டான். அப்படியொரு காதல்!” சொல்லிவிட்டு பல் செட்டை கழட்டிவைத்துவிட்டு சிரிக்க ஆரம்பித்தவன், “இவங்க இரண்டு பேருக்கும் நடுவில் நான்தான் ரொம்ப சிரமப்பட்டுப்போகிறேன். அவள் வாழ்க்கையில் எனக்குத் தெரியாத ரகசியம் என்றால் இவர்கள் ஏன் பிரிந்தார்கள் என்பதுதான்.” அவன் குழப்பத்துடன் தலையை வேகமாக சொரிந்து கொள்வான். இன்று வரை அனைவரும் எதிர்பார்த்த ரகசியத்தை முழுமையாகவோ, தொடர்ச்சியாகவோ சொன்னதில்லை. அதற்கான காரணம் கதை சொல்லும் போது அவன் கண்கள், யாரையோ கண்ட தயக்கத்தில், பயத்தில் அலைபாய்ந்து ஓய்ந்து விடும்.

“தண்ணி கடைக்காரனைப் பிரிந்து ஒரு வருடம் சென்றுதான் அவளிடம் ஓநாய் வந்தான். ஓநாய் என்றால் சாதாரண ஓநாய் இல்லை! பயங்கர வலிமையானவன்! இவளைக் காற்றுகூட தொட்டுவிட முடியாது. தலச்சம் புள்ளக்காரியை பாதுகாப்பது போல் பார்த்துக்கொண்டான். அவள் வாழ்க்கையில் எல்லா நாட்களும் பண்டிகைக் காலமாகத்தான் அவனோடு வாழ்ந்தாள். புதுசா பூத்த பூ மாதிரி அவ்வளவு அழகாக இருந்தாள். அவள் எப்படி திடீரென

அவ்வளவு அழகாக மாறினாளென மண்டையைப் பிய்த்துக் கொள்ளாதவர்களே இல்லை. நாள் முழுவதும் அனலில் வெந்தாலும் ஆர்கீட் பூ போல் வாடாமல், நிறம் மாறாமல் இருந்தாள்." சுவாரசியமாக கதையைச் சொல்லிக்கொண்டிருப்பவன் மீண்டும் ரகசியக் குரலில் பேசத் துவங்கி விடுவான், "யாரவது கவனித்திருக்கிறீர்களா? நான் ஓநாயைப் பற்றிப் பேசும் போது எப்படியாவது இந்தப்பக்கம் வந்துவிட்டு போய்விடுவாள். அப்போது அவள் முகத்தை பாருங்கள் அவன் மீது அவள் கொண்டிருந்த காதல் புரியும்" என்று அவன் சொன்னதில் இருந்து ஓநாயைப் பற்றி அவன் பேச ஆரம்பித்துவிட்டால் அனைவரும் அவளைப் பார்க்கத் துவங்கி விடுவார்கள்.

'ஓநாய்!' என்ற பெயரை சத்தமாக சொல்லிவிட்டு எழுந்து நின்று அங்கிருக்கும் முதலாளிகளைப் பார்த்துச் சிரிப்பான். "ஓநாயைப் பார்த்தால் மட்டுமல்ல அவன் பெயரைச் சொன்னால் போதும் இங்கிருக்கும் அத்தனை பேரும் எண்ணெய்ச் சட்டியில் போட்ட கோழி மாதிரி சுருண்டு போவானுங்க. அதுவும் நம்ம சிக்கன் ரைஸ்காரன் அவன் கடையில் தொங்கும் வாத்து மாதிரி நிப்பான்.

ஆனால், ஓநாய்! தண்ணிக் கடைக்காரனைப் பார்த்துவிட்டால் போதும், மரியாதையுடன் நடந்துக்கொள்வான். எனக்கு தெரிந்து அவர்கள் இருவரும் பேசிக்கொள்ளாமலே பேசிக்கொண்டார்கள். ஓநாய் சாப்பிட உட்கார்ந்து விட்டால், மது அல்லது குளிர் பானங்களைக் கொண்டுவந்து வைப்பான். குழந்தைகளை ஓநாயுடன் வெளியில் அனுப்பி வைப்பான். எச்சி கையால் காக்கா ஓட்டாத என் நண்பன் விலை உயர்ந்த கிரிஸ்டல் கல்லில் ஓநாயும், ஒரு பெண்ணும் இணைந்து இருப்பதுப்போல் டாலர் செய்து பரிசளித்தான். அந்த டாலர் இன்று வரை அவளிடம்தான் இருக்கிறது. சொல்லிவிட்டு சத்தமாகச் சிரிப்பவன் முன், மூன்றாவது ஜக் நிறைய மதுவை முறைத்தபடி வைத்துவிட்டு செல்வான் அவன் நண்பன். ஓநாயைப் பற்றி பேசினால் இவனுக்கு கோபம் பொத்துக்கிட்டு வந்திடும், பாசக்காரப்பய!" என்று இன்னும் சத்தமாக சிரிப்பான்.

"அதோ அந்த மூலையில் இருக்கும் சாப்பாட்டு மேசையில்தான் அவளும், ஓநாயும் இராத்திரி சாப்பாட்டை சாப்பிடுவார்கள். அதுவும் புதன்கிழமை இராத்திரி கூத்தும் கும்மாளமுமாக இருக்கும். நீ ஒன்றைக் கவனித்து இருக்கிறாயா?"

போதையில் தலை கவிழ்ந்து கிடப்பவனின் காதுக்குள் ரகசியமாய் பக்கத்து சாப்பாட்டு மேசைக்காரர்கள் திரும்பி பார்க்கும் அளவிற்கு "அந்த மேசைக்கு மட்டும்தான் அவள் சாப்பாடு பரிமாற போவாள்" என்று அவன் சொன்ன அந்த ரகசியத்தை நம்பி பலர் அந்த மேசைக்காக வரிசையில் காத்திருக்கிறார்கள் என்பது தனிக் கதை.

அவன் குரலில் காதல் கசிய மதுக் குவளையை முத்தமிட்டபடி "சில உறவுகளை நாம் புரிந்துக்கொள்ள முடியாது. புரிந்துக்கொள்ள முயற்சிக்கவும் கூடாது. அவள் மீது ஓநாய் கொண்ட காதல் எந்த அளவு உண்மையோ, அதே அளவு உண்மை ஓநாய் இந்த உலகத்தில் உள்ள எல்லா பெண்களின் மீதும் காதல் கொண்டிருந்தான். அவனுடன் கூடும் ஒவ்வொரு பெண்ணும் அவனைத் தீவிரமாக காதலித்தனர். அவன் பெண்களின் மீதும் காதல் கொள்ளும் விதம் வேறாக இருக்கலாம். ஆனால், அந்தக் காதலின் பரிசுத்த அளவு மாறாது. ஓநாய் பரிசுத்தமான காதல் தின்று வளர்வதை அவள் கர்வத்துடன் கொண்டாடினாள். அவள் ஓநாயின் கண்களில் வழியும் காதலை ரசித்தாள், நுகர்ந்து உணர்ந்தாள். காதலின் தீவிரத்தில் இப்படி அடிக்கடி அவனிடம் சொல்வாள், "நீ

ஓநாய் என்பதை மறந்து நாயாக மாறி என் கால்களையே சுற்றி வருகிறாய். என் மீதான அதிகாரத்தை மறந்து என்னைத் தேவதையாகப் பூஜிக்கிறாய். உன் மீது எனக்கான முழு சுதந்திரத்தை எவ்வித ஆச்சரியங்களும் இன்றி என் கையில் கொடுத்து விடுகிறாய். வினோதமான உன் காதலை என்னை ஆராதிக்க விடு. எனக்கு உன் காதல் வேண்டும். உன் காதலை நான் முழுமையாக உணர்ந்து, கொண்டாட வேண்டும் என்றால் நீ என்னை விட்டு விலகிப் போய்விடு" எனக் கட்டிக்கொண்டு முத்தமிடுவாள். அந்த முத்தங்கள் ஓநாய் காதுக்குள் வினோத ரகசியத்தின் கதைகளைச் சொல்லிச் சிரிக்கும்.

அந்த ரகசியத்தை சொல்லும் முன் போதையில் அவன் கண்கள் மின்னும். சுற்றும் முற்றும் யாரையோ தேடுவான். சில நாட்கள் அலட்சியத்துடன் ரகசியத்தை திறப்பான். சில நேரங்களில் பொசுக்கெனத் தண்ணீருக்குள் வைக்கும் நெருப்புத்துண்டைப் போல் சொல்லுவான். ஆனால், கண்கள் கலங்க நாகுழற அவன் ரகசியத்தைச் சொல்ல ஆரம்பித்தால் அழ மட்டுமே செய்வான்! சிறு பிள்ளையென தேம்புவான். அவனுடைய இளமைக்கான ரகசியம்

இந்த அழுகையாக கூட இருக்கும் என்று கேட்டுக்கொண்டிருப்பவர்களும் அழுவார்கள்.

“அந்தப் பெருநாள், அதுதான் அவள் வாழ்க்கையின் கடைசி பெருநாள். அந்தப் பெருநாளை அவள் மட்டும் தனியாகத்தான் கொண்டாடினாள். வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அன்று பிரியாணி விருந்து வைத்தாள். அப்படியொரு ருசியை நான் சாப்பிட்டதே இல்லை. விருந்து சாப்பிட்ட யாரும் ஓநாயைத் தேடவில்லை. ஓநாயை அதன்பிறகு யாரும் இங்க தேடவும் இல்லை! தண்ணிக் கடைக்காரனைத் தவிர.” சொல்லிவிட்டு வெகு நேரம் வரை அழுதுக்கொண்டிருந்தான்.

அதீத அன்பில் பிரிவு என்பது கொடுமையாக இருக்கும் அல்லது தவமாகும். அவர்களுக்கான வட்ட மேசை இன்று ஏனோ தனித்து கிடந்தது. அவள் அந்த மேசையில் தலை சாய்த்து ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தாள். அவள் தலையை ஓநாய் தடவிக்கொடுத்துக் கொண்டிருந்தான் ரகசியமாய்.

மொத்த வார்த்தைகள் : 1550